சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் 21.01.2026 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கல்லூரிக் கல்வித் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்பட்ட பொது இடமாறுதல் கலந்தாய்வில் (General Transfer Counselling) 164 ஆசிரியர்கள் மற்றும் 91 ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணைகளை வழங்கினார். உடன் உயர்கல்வித் துறைச் செயலாளர் முனைவர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி, மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

அ.தி.மு.க. – பா.ஜ.க. சந்தர்ப்பவாத கூட்டணிக்கு

மக்கள் வரும் தேர்தலில் தக்க பதிலடி தருவார்கள் என்பது உறுதி!

“தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜன. 25 - அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி. இக்கூட்டணிக்கு மக்கள் வரும் தேர்தலில் தக்க பதிலடி தருவார்கள் என்பது உறுதி என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களை விட இம்முறை, தமிழக தேர்தல் களத்தில் கடும் சூடு நிலவுமென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் வேலைகளில் கட்சிகள் இப்போதே தீவிரமாக இறங்கியுள்ளன. தி.மு.க.வை பொறுத்த வரை கடந்த சட்டமன்ற தேர்தலில் இருந்த அதே பலமான கூட்டணி அப்படியே இம்முறையும் தொடர்கிறது.

அ.தி.மு.க.வை பொறுத்தவரை ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அக்கட்சியின் கூட்டணி அறிவிப்பில் ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவி வருகின்றன. சொல்லப்போனால் அவரது மறைவுக்குப் பின், பா.ஜ. மேலிட தலைமையின் ரிமோட் கன்ட்ரோலில் செயல்படும் கட்சியாகவே அ.தி.மு.க. இருந்து வருகிறது. அந்த அழுத்தம் காரணமாகவே கடந்த 2019 எம்பி தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டணி அமைத்து போட்டியிட்டு படுதோல்வியை சந்தித்தன.

தினகரன்

ஜனவரி 24, 2026 சனிக்கிழமை

சந்தர்ப்பவாதம்

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களை விட இம்முறை தமிழக தேர்தல் களத்தில் கடும் சூடு நிலவுமென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் வேலைகளில் கட்சிகள் இப்போதே தீவிரமாக இறங்கியுள்ளன. தி.மு.க.வை பொறுத்தவரை கடந்த சட்டமன்ற தேர்தலில் இருந்த அதே பலமான கூட்டணி அப்படியே இம்முறையும் தொடர்கிறது.

அதிமுகவை பொறுத்தவரை ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அக்கட்சியின் கூட்டணி அறிவிப்பில் ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவி வருகின்றன. சொல்லப்போனால் அவரது மறைவுக்குப் பின், பாஜ மேலிட தலைமையின் ரிமோட்

தொடர்ந்து 2021 சட்டமன்ற தேர்தலிலும் பா.ஜ.வுடன் கூட்டணியை அ.தி.மு.க. தொடர்ந்தது. அந்த தேர்தலிலும் இக்கூட்டணியை தமிழக மக்கள் ஏற்கவில்லை. அ.தி.மு.க. ஆட்சி மீதான அதிருப்தி, பா.ஜ. மீதான எதிர்ப்பலை, தி.மு.க.வின் மக்கள் நலன் சார்ந்த தேர்தல் அறிக்கை, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சூறாவளி பிரசாரம் போன்றவை, தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தி.மு.க.வும் ஆட்சியை பிடித்தது. அ.தி.மு.க. கூட்டணி தோல்வியை தழுவியது.

தேர்தல் தோல்வியை தொடர்ந்து, அ.தி.மு.க.வின் மூத்த தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் பா.ஜ.வை அறிக்கை, பேட்டி என கிடைத்த கேப்பில் எல்லாம் கிழித்து தொங்க விட்டனர். பா.ஜ. தரப்பிலும் விட்டு வைக்கவில்லை. ஆண்மை இருக்கிறதா என்று கூட கேட்கிற அளவுக்கு அனைவரையும் ஒருமையில் எல்லாம் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர்.

விளைவு... 2024 எம்.பி. தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ. கூட்டணி பிரிந்தது. ஆனாலும், இந்த தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ. படுதோல்வியை சந்தித்தன. அனைத்து தொகுதிகளையும் திமுக கூட்டணி அள்ளியது. தமிழகத்தில் கூட்டணி வைக்காமல் கதை நடக்காது என தெரிந்த பா.ஜ., அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கான அச்சாரத்தை போடத் தொடங்கியது. பாஜ மாநில தலைவராக இருந்த அண்ணாமலையை மாற்றியது உள்பட அ.தி.மு.க. தரப்பிலான பல்வேறு கோரிக்கைகளை ஏற்று நடவடிக்கை எடுத்தது. இதையடுத்து இரு கட்சிகளும் மீண்டுமொரு முறை கூட்டணி அமைத்துள்ளன.

இந்த கூட்டணி முடிவால் மைக் கிடைக்கும் போதெல்லாம் எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்து வரும் டிடிவி.தினகரன், பா.ஜ. கூட்டணியில் இருந்து வெளியேறினார். துரோகத்திற்கான நோபல் பரிசை எடப்பாடிக்கு வழங்கலாம் என்கிற அளவுக்கு மிகக் கடுமையாக விமர்சித்தார். கடைசியில் பங்காளி சண்டையை பிறகு பார்த்துக்கலாம் என்கிற ரீதியில் கூட்டணியில் இணைந்துள்ளார். தாமரை இலை மேல் உள்ள தண்ணீர் போல இந்த கூட்டணியில் உள்ள தலைவர்கள் ஒட்டாமல் உறவு கொண்டாடி வருகின்றனர்.

இது முழுக்க முழுக்க தேர்தல் சந்தர்ப்பவாத கூட்டணி. மக்கள் நலனுக்கான கூட்டணி அல்ல என்பதை மக்களும் புரிந்துள்ளனர். அதனால்தான் எம்பி, எம்.எல்.ஏ., உள்ளாட்சி என அனைத்துவிதமான தேர்தல்களிலும் கூட்டணியாக வந்தாலும், தனித்தனியே நின்றாலும் அ.தி.மு.க., பா.ஜ.வுக்கு தமிழக மக்கள் தோல்வியை மட்டுமே தந்து வருகின்றனர். இம்முறையும் இந்த சந்தர்ப்பவாத கூட்டணிக்கு மக்கள் வரவிருக்கும் தேர்தலில் தக்க பதிலடி தருவார்கள் என்றே அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்வித் துறை – பொது இடமாறுதல் கலந்தாய்வில்

74 ஆசிரியர்கள் - 55 ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணைகள்!

அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்!

சென்னை, ஜன.25 - சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் 22.01.2026 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் 74 ஆசிரியர்கள் மற்றும் 55 ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்குப் பொது இடமாறுதல் கலந்தாய்வு (General Transfer Counselling) மூலம் பணி மாறுதலுக்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வித் துறைக்கு பல்வேறு உன்னதத் திட்டங்களான ‘நான் முதல்வன்’, ‘புதுமைப் பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’ போன்றவற்றை செயல்படுத்தி வருகிறார். அத்துடன் தொழிற்கல்வி பயில அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீட்டுடன் கல்வி விடுதி உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் அரசே ஏற்றும் கொண்டுள்ளது. அரசு பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பல்வேறு புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டிடவும், கல்லூரி நிர்வாகத்தினைத் திறம்பட நிர்வகிக்கவும் அண்ணா மேலாண்மை மையம் வாயிலாக அரசு பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்களுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும் நிர்வாகப் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், மாநில உயர் கல்வி மன்றம் வாயிலாக அரசு கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் சிறந்த முறையில் நவீனப் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் நலன் கருதி இணைய வழியாக விருப்பப் பணியிட மாறுதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்தப் பொது இடமாறுதல் கலந்தாய்வில் மொத்தம் 265 ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

அதேபோல், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பணிபுரியும் 218 தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் தகுதி வாய்ந்த 74 ஆசிரியர்களுக்கும் மற்றும் 55 ஆசிரியரல்லா தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் இடமாறு தலுக்கான ஆணைகளை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு பயன்படும் வகையில் 11 அரசு பொறியியல் கல்லூரிகள், 16 அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் என 81 கல்லூரிகளின் ஆய்வக வசதிகளை மேம்படுத்துவதற்காக 2025-26ஆம் ஆண்டிற்கு ரூ.9.45 கோடி நிதி ஒப்பளிப்பு செய்ததற்கான ஆணைகளை கல்லூரி முதல்வர்களிடம் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறைச் செயலாளர் முனைவர் பொ. சங்கர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச. விசாகன் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தியாகராயர் கல்லூரியில் பயிலும் 645 மாணவ, மாணவிகளுக்கு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர் இரா. பாலன், கல்லூரி முதல்வர் தியாகராஜர் மற்றும் முதுகலை பேராசிரியர்கள், இளநிலை பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

வீரவணக்க நாளில், தியாகம் மணக்கும் சில நினைவுகள்!

“தாய்மொழிக்காக தமிழ்நாடு சிறைக்குள் நுழைந்தது எனும் கட்டம் விரைவில் ஏற்பட்டாலும், ஏற்படலாம். எவ்வளவு எடுத்துச் சொல்லியும், வற்புறுத்தியும், டில்லிப்பீடம் தனது எதேச்சதிகாரத்தையும், சாணக்கிய புத்தியையுமே பயன்படுத்துமென்றால், தமிழர்கள், தமிழ்நாட்டுக்காளைகாள் தயாராகுங்கள் என்று முரசொலிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மேகங்கள் விலகுமென்ற அறிகுறிகள் தெரியவில்லை. அதற்கான இந்தி மொழி நடவடிக்கைகளும் இல்லை. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எனும் கீதத்தை பாடிக்கொண்டு, அணிவகுத்துக் கொண்டு அறப்போரில் ஈடுபட தாயகமே, தயாராயிரு! தயாராயிரு! ” என்று நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பே ஆருடம் கணித்துவிட்டே போனார்.

கிட்ட, கிட்ட வந்து, மீண்டும் எட்டி, எட்டிச் செல்லும் குட்டிக் குரங்கின் குணத்தோடு, கொள்கை மறவர் பாசறையாம் தமிழர் உணர்வோடு உரசி, மூக்குடைப்படுவதே, மூளி அலங்காரி மொழியாம் இந்திக்கு வேடிக்கையான வாடிக்கையாகிப் போனது.

ஒரு இனத்தின் மீதான தொடர்ச்சியான போராகவே இந்தித் திணிப்பு மாமாங்கத்திற்கு ஒரு முறை வந்து, வந்து நம்முடன் மோதுகிறது.

அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெற்ற நிறவெறி வர்க்க போராட்டம் போல், இங்கே ஆதியிலே நிகழ்ந்த ஆரிய திராவிட யுத்தம் போல் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இன்றைய காலம் வரை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சுருட்டி வைத்த வாலை, அடிக்கடி அவிழ்த்துவிடும் அராஜகத்தை டெல்லி அரங்கேற்றி வந்தது.

இத்தகையோரும், நமது இனத்தின் இளையோரும், இந்தித் திணிப்பு எதிர்ப்பிற்கு நம் முன்னோர்கள் கொடுத்த சம்மட்டி அடியையும், சரிந்து போகாத வீரத்தையும் பல விதங்களில் வெளிப்படுத்தியதையும் அறிதல் அவசியம்.

”எப்பக்கம் வந்துவிடும் இந்தி? அதன் இடுப்பொடிக்கக் கிளம்புது காண் தமிழ்ச்சிங்கக்கூட்டம்! ” என வீரம் கொப்பளிக்க முழங்கிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் வீர உரை கேட்டும்,

” எதிர்ப்பை இனிப்பாக்கிக் கொள்ளும் ஏந்தல்களன்றோ என் தம்பிகள் ” என்ற அறிஞர் அண்ணாவின் அன்புமொழி கேட்டும், ஆர்ப்பரித்த பெரும் இளைஞர் பட்டாளம், வீடு மறந்து, தாய் தந்தை, மனைவி மக்கள், உறவு மறந்து அன்னை தமிழ் காக்க ஆதிக்க இந்தியை எதிர்த்த வீரவரலாற்றுத் தியாகச் சரித்திரமன்றோ, தமிழ் மண்ணில் நிகழ்த்தப்பட்ட மொழிப்போர்.

மொழிப்போரில் நமது விழிநீர் மட்டுமின்றி செந்நீரும் சிந்தியன்றோ தமிழணர்வுப் பயிர் தழைத்தோங்க உரமானது.

ஒரு நாட்டை அழிக்க வேண்டுமாயின், முதலில் அதன் மொழி அழிக்கப்படவேண்டும் என்பது ஜெர்மானியப் பழமொழி.

இதை மெய்ப்பிக்கும் வகையில், கன்னித்தமிழ் மீது காட்டு தர்பார் இந்தித் திணிப்பு கட்டாயமாக்கப்பட சட்டம் கொண்டு வந்த ஆட்சியாளர் எண்ணம் பொடிபட, தமிழகமே கொந்தளித்த காலமன்றோ இந்தித் திணிப்பு எதிர்ப்புப்போர்.

உலக வரலாற்றில் எத்தனை, எத்தனைப் போராட்டங்கள், புரட்சிகள், கிளர்ச்சிகள், விடுதலை வேட்கையை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், தாய்த்தமிழ் மீது கொண்ட பற்றால், தங்கள் இன்னுயிரையும் தந்து, செந்தணலின் கூட்டிலும், செம்மொழியாம் தமிழ், வாழ்க! வாழ்க! என தேக்குமரம் போல் வீழ்ந்த தியாக மறவர் பாசறைக் கொண்டது தமிழ்நாடு மட்டுமே!

இத்தகு தியாக தீபங்களுக்கு ஆண்டாண்டு காலமாக கழகம் ஆற்றி வரும் கடமையான அஞ்சலி, வீரவணக்க பொதுக்கூட்டங்கள் தமிழகமெங்கும் நடைபெறுகிறது.

ஆருயிர் தலைவர், தமிழினத்தளபதியவர்கள், அறிவுச்சுடரொளி! காஞ்சி தந்த கருத்துப்பேழை! கற்பூரப்பெட்டகம்! பேரறிஞர் அண்ணா அவர்கள் உதித்த காஞ்சி மண்ணில், தியாகங்களை நினைவுகூர்ந்து, இனமான முழக்கமிடுகிறார்

முன்னதாக வரும் 25.1.2026 ஞாயிறு காலை 7 மணிக்கு மொழிப் போரில் முதல் பலியான தாளமுத்து நடராசன் இவர்களின் கல்லறை அமைந்திருக்கும் வடசென்னை மூலகொத்தளம் கல்லறைத்தோட்டத்தில் மலரஞ்சலி செலுத்துகிறார்.

இதே நாளில் தென்னவர் போற்றும் சின்னவர், சனாதன வைரி! மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி அவர்கள் வடசென்னை தியாக சீலர்கள் நிறைந்த திருவொற்றியூரில் வீரவணக்க உரையாற்றுகிறார்.

1965 மொழிப்புரட்சியின் வலிமிகுந்த நாட்களிலும் லட்சோபலட்சம் தமிழ் உள்ளங்களிலிருந்து பீறிட்டுக்கிளம்பி, தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தமிழினப் பகைவர் வீழ்க! அண்ணா வாழ்க! கலைஞர் வாழ்க! என அதிர்ந்தது தமிழர் முரசு! பின்னர் அடங்கியது அந்நாளைய ஆதிக்க தமிழக அரசு!

இக்காலகட்டத்தில் கழகம் ஆற்றியப்பங்கும், ஏற்ற தியாகமும், தமிழ் மொழி வரலாற்றில் மறுக்கமுடியாத, மறைக்க முடியாத பக்கங்களாகும்.

” இந்தியாவிற்கு பொதுமொழி தேவை என்பதற்காக எந்த மொழியையும் நாம் வலுக்கட்டாயமாக திணிப்பதென்பது நிச்சயமாக கூடாது ” என பண்டித நேரு 1948 ல் நாடாளுமன்றத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக எல்லா மாநிலத்திலும் இந்தி மொழி கட்டாயமாக்கத் திணிக்கப்படுவதை எதிர்த்து அறவழியில் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்க நம் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1965 ஜனவரி 26 குடியரசு நாளை துக்க நாளாக அறிவித்தார்.

இந்தி எதிர்ப்பு கண்டனக் கூட்டம் 27.1.1965 செவ்வாய் மாலை 4.30 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மைதானத்தில் அறிஞர் அண்ணா எம். ஏ. எம்.பி., கே.ஏ.மதியழகன் எம்.எல்.ஏ, இரா.செழியன் எம்.பி., காஞ்சி மணிமொழியார் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ, இரா. தருமலிங்கம் எம்.பி., நீலநாராய ணன் ஆகியோர் பேசுவதாக அறிவிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 25.1.1965 அன்று இரவு 1.30 மணியளவில் போலீசாரால் கைது செய்யப்படுகிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் குளித்தலை கூட்டத்தை முடித்துக் கொண்டு கோவைக்குச் செல்ல திலக் லாட்ஜ்க்கு சென்றுகொண்டிருக்கையில், வழியில் மகூதிபாளையத்தில் இரவு 1.00 மணிக்கு கைது செய்யப்பட்டார்.

அண்ணாவும், கலைஞரும் கழகத்தின் முன்னணித் தலைவர்களும் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 151 படி கைது செய்யப்பட்டு, பிப்ரவரி 2,3 தேதிகளில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், முரசொலி நாளேட்டில் தலையங்கம், கேலிச்சித்திரம் தீட்டியதின் மூலம் மாணவர் கிளர்ச்சியை தூண்டினார் என இந்தியப்பாதுகாப்புச் சட்டப்பிரிவு 30 (1) ன் படி தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் 16.2.1965 இரவு சென்னையில் கைது செய்யப்பட்டு, 17ந்தேதி பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

சுதந்திர இந்தியாவில் பாதுகாப்பு சட்டப்படி அந்நாளில் கைது செய்யப்பட்ட ஒரே தலைவர் நமது தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமே!

ஏறக்குறைய 65 நாட்கள் பாளைச்சிறைவாசம்.

தனிமைக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்த அவர் ஏற்ற இன்னல்கள் ஏராளம், ஏராளம்.

தலைவர் கலைஞரை பாளையங்கோட்டை சிறையில் பார்த்து விட்டு திரும்பிய அண்ணா, ” நான் கூட தம்பி கருணாநிதி தனிமைச்சிறையில் அவதியுறுகிறாரோ என்று அச்சமுற்றிருந்தேன் ஆனால் அவ்வாறு கொடிய நெஞ்சம் கொண்டவரல்ல நமது முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம்.

தம்பி கருணாநிதிக்கு துணையாக பாம்பு, பல்லி, தேள் போன்ற விஷ ஜந்துக்களையும் துணையிருக்க வைத்திருக்கிறார் என்று வேதனையோடு நையாண்டி புரிந்தார்.

இவ்வளவு சிரமங்கள் கொடுத்து, சித்திரவதைகளை கட்டவிழ்த்து விட்டு, ஆதிக்கப்புரி அராஜகம் செய்ததெதென்றால், ஆண்டுகள் 20 கடந்து அடுத்தொரு காலகட்டம் வந்தது. ஆனால் மாநிலத்தில் அண்ணாவின் பெயரைத்தாங்கிய எம் ஜி. ஆரின் அ.தி.மு.க. ஆட்சி.

17.11.1986ல் சென்னை பூங்கா நகரில் கழகப் பொதுச் செயலாளர், பேராசிரியர் அவர்கள், ” தேவநாகரி வரி வடிவத்தில் உள்ள இந்தி தான் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான மொழியாக இருக்க வேண்டும். ” என்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17 வது பகுதியின் வாசகத்தை எரியூட்டினர்.

அவருடன் அரசியல் சட்டநகலை எரித்த 301 கழகத் தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

இறுதியாக 9.12.1986 அன்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை வள்ளுவர் கோட்டம் அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு எதிரே ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்த்து முழக்கத்திற்கிடையே அறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு, அங்கு கூடியிருந்தோர் முன் உரையாற்றிவிட்டு, அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் நகலை கொளுத்த, போலீசார் கைது செய்து, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். (நன்றி: கவிஞர் சாவல்பூண்டி மா. சுந்தரேசன் அவர்களின் மொழிப்போர் வரலாறு நூல்)

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு சட்டநகலை எரித்த நமது 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டது .

அன்று தலைவர் கலைஞர் அவர்களோடு சிறைபுகுந்து இன்றும் தொய்வின்றி கழகப்பணியாற்றும் எங்கள் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பழவேற்காடு மீனவர் பகுதியைச் சார்ந்த மொழிப்போர் தியாகி ஜே. எஸ்.கன்னிமுத்து அவர்கள் அந்த நாள் ரணங்களை அசைபோடுகையில் சிறையிலே எங்களுக்கு மஞ்சள் வண்ண அச்சடித்த சோறு, புளியிலும், காரத்திலும் சேராமல் ஒதுங்கி நிற்கும் பரங்கிக்காய் குழம்பு, நூறு பேருக்கு ஒன்றிண்டு கழிவறை, துர்நாற்றம் வீசும் அறைகள், சுகாதார சீர்கேடு இப்படித்தான் நான் 49 நாட்கள் சிறையில் கழித்தேன்.

எங்களுக்கிருந்த மிகப்பெரிய ஆறுதல், பெருமை! தனக்கு கைதியுடை தந்து அ.தி.மு.க. அரசு அசிங்கப்படுத்தினாலும், அன்றாடம் காலையில் ஒவ்வொரு அறைக்கும் வந்து தனித்தனியே எங்களை நலம் விசாரித்தார் நமது தங்கத்தலைவர் கலைஞர் என்பதே ” என்றார்.

இதோடு வாய்மையுரு தமிழர்கள் பலரை வாட்டி, வதைத்து, அவர்தம் இன்னுயிரை போக்கிக்கொள்ளும் அளவிற்கு இறங்கி ஆட்டம் போட்ட இந்தி என்ன தொன்மை மொழியா?

ஆயிரங்காலத்து இலக்கண, இலக்கியவளம், வரலாறு மிக்கதா? என்றால் இல்லையென்பதை நமது அறிவுலக மேதை முரசொலி மாறன் அவர்கள் பல ஆதாரங்களோடு ஆணித்தரமாய் விளக்குகிறார் தனது ”இந்தி என்றால் என்ன? ஆராய்ச்சி நூலில்.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட இந்தி என்ற மொழியே கிடையாது. அது 150 ஆண்டுகளுக்குட்பட்ட பல மொழிகளின் கூட்டுத் தொகுப்பு தான்.

பாபர் காலத்திலோ, ஹுமாயூன் காலத்திலோ இந்தி கிடையாது. அக்பர், ஜஹாங்கீர் காலத்தில் பிரபலமாக இருந்த மொழி பிராஜ்பாஷா. இந்தி அல்ல. (அக்பர் பிராஜ்பாஷாவில் கவிதைகள் கூட எழுதியுள்ளார்)

இந்தி நேற்று உருவான மொழி. 1920 ஆம் ஆண்டிலே பிரபல ஆங்கில நூலாசிரியர் கோல்ட்ஸ்மித் (Gold Smith) எழுதிய ஹெர்மிட் (Hermit) என்ற கவிதையை ஒருவர் மொழிபெயர்த்தார். அதுதான் நவீன இந்தியில் எழுதப்பட்ட முதல் கவிதை. அதுகூட மொழி பெயர்ப்புதான்.

ஆனால் இங்கோ, தொல்காப்பியம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதா? ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதா? என்கிற வாதம் மொழியியல் ஆராய்ச்சியாளர்களுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய தொன்மை மொழிக்கு சொந்தக்காரர்களாகிய நாம் இந்தித்திணிப்பை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எனச் சினங்காட்டும் அவர், இந்தி நுழைவை, கலாச்சார ஆக்கிரமிப்பாக கருதுவதில் தவறென்ன இருக்கமுடியுமென சாடுகிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அருமையானதொரு உதாரணம் சொன்னார்.

” இந்தி எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு! ஆங்கிலம் எங்களுக்கு நாங்கள் சொல்கிறபடி சமைத்துப் போடும் சமையல்காரன்!

தமிழ் எங்கள் மனையறிந்து, மணமறிந்து, எங்கள் ஊனறிந்து, உணர்வறிந்து வளர்க்கின்ற தாய்! என்றார்.

வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

நமது இயக்கக் கவிஞர் குடியரசு அவர்கள், ” பூணூல் தோரணத்தில் மந்தி தொங்குவது போல் இருக்கும் எழுத்து வடிவம் கொண்டது இந்தி மொழி என நகைத்தார்.

இத்தகைய கேலிக்கும், கிண்டலுக்கும் உரிய மொழி, தொன்மை இலக்கண, இலக்கிய வரலாறு அற்ற மொழி, முறையான, நிறைவான கலாச் சாரத்தை போதிக்காத மொழி, அடிக்கடி ஆடிப்பெருக்கு போல தலைகாட்டி, வாலறுபடுவது அதன் வாடிக்கையாகிவிட்டது.

எவ்வளவு பெரிய அறிஞர்கள், தலைவர்கள், தமிழ் ஆர்வலர்கள், தளகர்த்தர்கள், இளைஞர்கள், மாணவர்கள், மகளிர் என ஒரு நூற்றாண்டாய் நமது எதிர்ப்பினை ஒரு அண்மை மொழியின் திணிப்பிற்காக தங்களது உணர்வு மேலோங்கிய எதிர்ப்பினை எல்லா வகையிலும் பிரதிபலித்தும் அவ்வப்போது சில இந்தி மொழி வெறியர்கள் தங்கள் இஷ்டப்படி இந்தியை நம்மீது திணிக்க முயல்வது நம் இனத்தைக் கஷ்டப்பட வைக்கிறது.

ஒரு இனத்தின் மீது தொடுக்கப்பட்ட போர், வலுக்கட்டாயமாக இந்தியைத் திணிக்க கட்டவிழ்க்கப்பட்ட வெறியாட்டம், திரும்பிப் பார்த்தால், திடுக்கிடச் செய்கிறது. வியப்பாக இருக்கிறது. நம் தமிழ் மொழி காக்க, ஆதிக்க இந்தியை அடித்து விரட்டிட இன்னும் பல தியாகங்களை தமிழகம் ஏற்கத்தான் வேண்டும்.

இந்தியாவில் நல்லாட்சியில் சிறந்தோங்கும் திராவிடமாடல் நாயகர், திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் தலைமை தமிழினத்தின் வாளாக, வேலாக, கேடயமாக நமக்குள்ளது என்பதே நமக்குள்ள பெரும்பலம்.

அதோடு சனாதனத்தின் சல்லிவேரை கிள்ளிப்போடும் சாகசம் அறிந்த, தெரிந்த துணைமுதல்வர், தூக்குவோம் தமிழ்க்கொடியை!

நீக்குவோம் ஆதிக்க வெறியை! என நம்பிக்கையூட்டுகிறார்.

அன்புச் சகோதரர் கழக அமைப்புச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு முரசொலியில் எழுதிய கட்டுரையொன்றில் அன்றைய இளைஞரணிச் செயலாளராகத் ஓய்வின்றி செயலாற்றிய நமது தளபதியவர்களைக் குறித்து, ” பூ உறங்குது! பொழுதும் உறங்குது! நீ உறங்கவில்லையே தலைவா! ” என்று எழுதியிருந்தார். படித்த எனது கண்களில் மட்டுமல்ல; சொல்லக் கேட்டேன் இந்த வரிகள் எல்லோரையும் கலங்க வைத்து, கண்களில் நீரைக் கசியவிட்டது என்று.

ஆமாம்.

இந்தியாவில் உறங்கா நகரம் மதுரை!

உறங்காமல் ஓய்வின்